மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பழனி.

அ.வ.எண்.53/2023

வாக்குமூலம்: பி.வா.சா.1 ரத்தினகுமார்

<u>02.09.2024:</u> சாட்சி ஆஜர். சத்தியப் பிரமாணம் செய்து வைக்கப்பட்டு

<u>குறுக்கு விசாரணை :–</u> நீங்கள் எந்த ஆண்டிலிருந்து அரசு பள்ளியில் ஆசிரியராக உள்ளீர்கள் என்றால், கடந்த 2008 ஆம் ஆண்டு முதல் ஆசிரியராக பணிபுரிந்து வருகிறேன். உங்களுக்கு அரசு புறம்போக்கு, நத்தம் புறம்போக்கு, நீர்நிலை புறம்போக்கு ஆகிய விபரங்கள் தெரியும் என்றால் சரிதான். சர்வே எண்.751/5 என்பது தாவாச்சொத்து. அந்த சர்வே எண்ணில் அமைந்துள்ள தாவாச் சொத்தில் உள்ள வீட்டில் வாதி, அவருடைய அம்மா உள்ளிட்டவர்கள் சுமார் 50 வருடங்களாக குடியிருந்து வருகிறார்கள் என்றால் சரியல்ல, நான் குடியிருந்து வருகிறேன். வாதி குடியிருந்து வரும் வீட்டின் சர்வே எண் தெரியுமா என்றால் தெரியாது. வாதி குடியிருக்கும் வீட்டின் சர்வே எண்.751/5 என்றும், நீங்கள் அதை மறைத்து பொய்யாக சாட்சியமளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல. உங்கள் வீட்டிற்கு தென்புறத்திலும், கிழபுறத்திலும், மேல்புறத்திலும் வாதி வீடு உள்ளது என்றால், தென்புறத்தில் வாதிக்கு பாத்தியப்பட்ட வீடு உள்ளது. எனது வீட்டிற்கு கிழபுறத்திலும், மேல்புறத்திலும் எங்களுக்கும், வாதிக்கும் பாத்தியப்பட்ட இடம், வீடுகள் பொதுவாக உள்ளது. நீங்கள் குடியிருக்கும் வீட்டின் சதுரடி எவ்வளவு என்றால், சர்வே எண்.751/5 ல் உள்ள வீட்டிற்கு அளவு கிழமேல் கைமுழம் 7, தென்வடல் கைமுழம் 7–1/2 ஆகும். அதுபோக சர்வே எண்.751/6, 751/4 ஆகியவற்றிலும் வீடுகள் உள்ளது. சர்வே எண்.751/6, 751/4 ல் அமைந்துள்ள வீடுகளின் சதுரடி எவ்வளவு என்றால் அவை ஏறக்குறைய சர்வே எண்.751/5 ல் உள்ள வீட்டின் அளவு இருக்கும். சர்வே எண்.751/4 ல் உள்ள வீடு தனியாக உள்ளது. சர்வே எண்.751/5, 751/6 ல் உள்ள வீடு ஒன்றாக உள்ளது. இடையில் குறுக்குச்சுவர் ஒன்று வைத்துள்ளோம். நீங்கள் மேற்சொன்ன அளவுகளில்தான் உங்களுக்கு சொந்தமான வீடுகள் அமைந்துள்ளது என்றால் சரிதான். அந்த வீடுகளுடன் இணைந்த காலியிடம் எவ்வளவு உள்ளது என்றால் வீடுகள் மட்டும் எங்களுக்கு சொந்தமானது. காலியிடம் புறம்போக்காகும். அதற்குண்டான ஆவணங்கள் எங்கள் வசம் உள்ளது. 13.11.1931 ம் தேதி வாதியின் அப்பாவின் அப்பா தங்கமுத்து மற்றும் அவரது சகோதரர் கருப்பண கவுண்டர் ஆகியோர் பாகப்பிரிவினை செய்துள்ளார்கள் என்றால் அது எனக்கு தெரியாது. கருப்பணகவுண்டர் உங்களது தகப்பனாரின் தகப்பனார் என்றால் சரிதான். 13.11.1931 ம் தேதி முத்துச்சாமி கவுண்டர் மற்றும் அவருடைய சகோதரருக்கிடையே பாகப்பிரிவினை

நடந்ததா என்றால் அது எனக்கு தெரியாது. உங்களுடைய முதல் விசாரணை பிரமாண வாக்குமூலத்தில் அவ்வாறு முத்துச்சாமி மற்றும் அவருடைய சகோதரருக்கிடையே பாகப்பிரிவினை நடந்ததாக கூறியிருந்தால் அது தவறு என்றால் 1931 ல் பாகப்பிரிவினை நடந்த விபரம் தெரியும், ஆனால் அந்த பாகப்பிரிவினை ஆவணத்தில் உள்ள விபரங்கள் தெரியாது. நீங்கள் வழக்கிற்காக முன்னுக்குப்பின் முரணாக சாட்சியமளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல. 16.11.1990 முதல் வாதியின் தகப்பனார் பெயரில் சர்வே எண்.751/5 க்குண்டான பட்டா உள்ளது என்றால் பட்டா அவர் பெயரில் தவறுதலாக ள்ளது. அந்த பட்டா 1990 ம் ஆண்டு முதல் உள்ளது என்றால் அது எனக்கு தெரியாது. 16.11.1990 முதல் வாதியின் தகப்பனார் பெயரில் பட்டா இருப்பதாக உங்கள் தரப்பில் வாதியை குறுக்கு விசாரணை செய்தபோது கேள்வியை முன்வைத்துள்ளீர்கள் என்றால் அது எனக்கு தெரியாது. நீங்கள் சொல்லித்தான் அந்த கேள்வி கேட்கப்பட்டது என்றும், வழக்கிற்காக அதை மறுக்கிறீர்கள் என்றால் சரியல்ல. நீங்கள் 1931 ம் ஆண்டு பாகப்பிரிவினைப்படி வடக்குப்பார்த்த வீடும், அதை ஒட்டிய காலியிடமும் உங்கள் குடும்பத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ளதாக முதல் விசாரணை வாக்குமூலத்தில் சொல்லியுள்ளீர்கள் என்றால் சரிதான். உங்கள் தகப்பனார் நீங்கள் குடியிருக்கும் வீட்டிற்கு மேல்புறம் மாரப்ப கவுண்டரிடமிருந்து சொத்தை கிரையம் பெற்றுள்ளார் என்றால் சர்வே எண்.751/5 ல் மேல்புறம் பாதி பங்கை கிரையம் பெற்றுள்ளார். அந்த வீட்டில் மீதி கிழபுற பாதி பங்கு முத்துச்சாமி பாகம் என்றால் சரிதான். முத்துச்சாமி கவுண்டர் உங்கள் தகப்பனாரின் தகப்பன் என்றால் சரிதான். முத்துச்சாமி கவுண்டருடன் பிறந்தவர்கள் நாச்சிமுத்து, சுப்பையகவுண்டர், பழனிச்சாமி என்றால் சரிதான். நாச்சிமுத்து கவுண்டர் சுப்பைய கவுண்டர் ஆகியார்களுக்கு வாரிசுகள் இல்லை என காட்டக்கூடிய ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வாதியின் அப்பாவின் அப்பா தங்கமுத்து என்பவரும், நீங்கள் சொன்ன முத்துச்சாமி கவுண்டரின் தகப்பனார் கருப்பணகவுண்டரும் உடன்பிறந்த சகோதரர்கள் என்றால் இருக்கலாம். சரியாகத் தெரியவில்லை. மேற்படி தங்கமுத்து மற்றும் கருப்பணகவுண்டருக்கிடையில் 1931 ல் பாகப்பிரிவினை ஏற்பட்டது என்றும், அந்த பாகப்பிரிவினையை தொடர்ந்துதான் கருப்பணகவுண்டர் வாரிசுகளுக்கிடைய நீங்கள் சொன்ன 1941 பி.வா.சா.ஆ.1 பாகப்பிரிவினை ஏற்பட்டுள்ளது என்றால் சரிதான். மாரப்பகவுண்டரிடமிருந்து உங்கள் தகப்பனார் கிரையம் பெற்ற வீடு மற்றும் முத்துச்சாமிகவுண்டரின் பாக வீடு ஆகியவற்றுக்கு எதிர்புறம் வடக்கே உள்ள காலியிடம் 1941 ல்

பாகப்பிரிவினை செய்துகொண்ட முத்துச்சாமிகவுண்டர், சுப்பையகவுண்டர், பழனிச்சாமி, நாச்சிமுத்து ஆகியோர்களுக்கு பொதுவாக பாத்தியப்பட்டது என்றால் சரிதான். தற்சமயம் நாங்கள் மட்டும் அனுபவித்து வருகிறோம். நாச்சிமுத்துக்கவுண்டர், சுப்பைய கவுண்டருக்கு வாரிசுகள் யாரும் இல்லை. அதனால் நாங்களே அந்த இடம் முழுவதையும் அனுபவித்து வருகிறோம். பழனிச்சாமி என்பவருக்கு வாரிசுகள் உள்ளது என்றால் வாரிசுகள் உள்ளனர். சுப்பைய கவுண்டர் மற்றும் நாச்சிமுத்து கவுண்டருக்கு பழனிச்சாமியும் ஒரு வாரிசு என்ற அடிப்படையில் ஏற்பட்ட பாகத்தை அவர் உங்கள் தகப்பனாருக்கு கிரையம் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. நீங்கள் பழனிச்சாமியின் வாரிசுகளுக்குள்ள மேற்கண்ட உரிமையை மறைத்து சொத்தை அனுபவிப்பதுபோல் வாதிகளின் சொத்தையும் அபகரிக்க முயற்சி செய்கிறீர்கள் என்றால் சரியல்ல. தாவாச்சொத்தில் உண்மையிலேயே உங்களுக்கு உரிமையிருந்திருந்தால் 33 வருடங்களாக தாவாச்சொத்து குறித்து வாதியின் தகப்பனார் பெயரில் உள்ள பட்டாவை ஆட்சேபணை செய்திருப்பீர்கள் என்றால் சரியல்ல. வாதி குடியிருக்கும் வீடு லாகட வீடு எத்தனை வருடமாக உள்ளது என்றால் கடந்த 1931ம் வருடத்திலிருந்து இருக்கலாம். வாதி கூட்டாக உரிமை உள்ள சொத்தை அனுபவித்து வருவதாகவும், பாகம் பிரிக்காமல் உள்ளதாகவும் முதல் விசாரணையில் சொல்லியுள்ளீர்கள் என்றால் சரிதான். 1931ம் ஆண்டு பத்திரத்தில் சொல்லப்பட்ட சொத்தை பிரித்துக்கொடுக்காததால் அவ்வாறு சொல்கிறேன். உண்மையில் தாவா சொத்தில் உங்களுக்கு உரிமையோ, பங்கோ இருந்திருந்தால் அதற்கான பாகப்பிரிவினை நடவடிக்கை எடுத்து பாகப்பிரிவினை வழக்கு தாக்கல் செய்திருப்பீர்கள் என்றால் சரியல்ல. கடந்த 1931ம் ஆண்டு பாகப்பிரிவினை பத்திரப்படி வாதியின் முன்னுரிமையாளர் தங்கமுத்துவுக்கு தாவா சொத்தும், அதற்கு வடபுறத்தில் உங்கள் முன்னுரிமையாளர் கருப்பணகவுண்டருக்கும் சொத்து ஒதுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 1941ம் வருடம் பாகப்பிரிவினையில் மேற்சொன்ன தங்கமுத்து தரப்பினராக இல்லை என்றால் சரிதான், ஆனால் சாட்சி கையொப்பம் செய்துள்ளார். சர்வே எண்.751/6, 751/4 ஆகிய சொத்துக்கள் உங்களுக்கு ஒதுக்கப்பட்டது என்றும், சர்வே எண்.751/5 வாதி குடும்பத்துக்கு ஒதுக்கப்பட்டது என்றும், நீங்கள் அதில் உரிமை கோருவது முறையல்ல என்றால் சரியல்ல. பொதுவாக நத்தம் என வகைப்பாடு செய்யப்பட்ட இடத்தில் ஒருவர் 50 ஆண்டு அளவில் குடியிருந்தால் அவருக்கு அந்த இடம் சொந்தமானதாக கருதப்படும் என்றால், தாவாச்சொத்தை நாங்கள்தான் அனுபவித்து வருகிறோம். தாவாச்சொத்தை வாதியும் அவருடைய முன்னோர்களும்தான்

அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. நீங்கள் அதற்கு பக்கத்தில் உள்ள இடத்தைத்தான் அனுபவித்து வருகிறீர்கள் என்றால் சரியல்ல. நீங்கள் தாவாச்சொத்தை இதுவரை எத்தனை முறை அளந்தீர்கள் என்றால் ஒருமுறை அளந்துள்ளோம். வட்டாட்சியர் உங்களுக்கு எதிராக வாதியின் தகப்பனார் பயரில் உள்ள பட்டாவை ரத்து செய்ய முடியாது என்று உத்தரவிட்டார் என்றும், அதற்கு எதிராக நீங்கள் கோட்டாட்சியரிடம் மேல்முறையீடு செய்தீர்கள் என்றால் சரிதான். வட்டாட்சியர் எங்கள் பெயரில் பட்டா வழங்கலாம் என கோட்டாட்சியருக்கு பரிந்துரைத்தார். அதன்பேரில் கோட்டாட்சியர் உத்தரவுப்படி நில அளவையர் சொத்தை அளந்தவுடன் வாதி இந்த வழக்கை தாக்கல் செய்துவிட்டார். வாதியின் தாயார் வழக்கு சொத்தில் குடியிருந்து வருகிறார் என்றும், நீங்கள் உங்கள் செல்வாக்கை பயன்படுத்தி பலமுறை நீங்கள் சொத்தை அளப்பதாக தொந்தரவு செய்ததால் வாதி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. வட்டாட்சியர் உங்களுக்கு எதிராகத்தான் உத்தரவு போட்டார் என்றால் சரியல்ல. தாவாச்சொத்து பத்திரப்படியும், பட்டாப்படியும் அனுபவப்படியும் வாதிக்கு பாத்தியப்பட்டு அவர் வசம் உள்ளது என்றும், நீங்கள் பொய்யாக எதிர்வாதம் செய்கிறீர்கள் என்றும் சொன்னால் சரியல்ல. நீங்கள் வாதியின் அனுபவத்திற்கு தடையும், இடையூறும் செய்து வருகிறீர்கள் என்றால் சரியல்ல.

<u>மறு விசாரணை :–</u> இல்லை.

by the Typist and read over to the witness in Tamil and acknowledged by him/her to be correct.

R. KARTHIKEYAN

Digitally signed by R. KARTHIKEYAN
Date: 2024.09.02 16:41:20 +0530

District Munsif,
Palani.